# ஒன்ட்டேரியோ அரசாங்கம் ஏப்ரல் 3 ஆம் தேதி துவங்கி மாகாணம் தழுவிய ஊரடங்கினை அறிவிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 1, 2021) –ஒன்ட்டேரியோ அரசாங்கம் ஏப்ரல் 3 ஆம் தேதி துவங்கி மாகாணம் தழுவிய ஊரடங்கினை இன்று அறிவித்தது; இந்த ஊரடங்கானது ரீஜன் ஆஃப் பீல் உள்ளிட்ட ஒன்ட்டேரியோ பகுதியில் குறைந்தது நான்கு வாரங்களுக்கு அமலில் இருக்கும்.

கீழக்கண்டவை உள்பட, ஆனால் இவை மட்டுமே அல்லாத பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

- கட்டிடங்களுக்கு உட்புறமாக ஏற்பாடு செய்யப்படும்  பொது நிகழ்வுகள் மற்றும் சமூகக் கூட்டங்களைத் தடை செய்தல்; தனியாக வசிப்பவர்கள் இன்னும் ஒரேயொரு வீட்டாரோடு சேர்ந்திருக்க அனுமதிக்கப்படுகிறார்கள்;
- திறந்தவெளியில் ஏற்பாடு செய்யப்படும்  பொது நிகழ்வுகள் அல்லது சமூகக் கூட்டங்களில் கூடுகின்ற நபர்களை அதிகபட்சமாக 5 பேர்களுக்குள் கட்டுப்படுத்துதல், ஒரே வீட்டில் வசிக்கின்ற குடும்ப உறுப்பினர்கள் கொண்ட (உங்களுடன் வசிக்கும் நபர்கள்) கூட்டங்களைத் தவிர;
- சில்லறை விற்பனை செய்கின்ற சூப்பர் மார்க்கெட்டுகள், மளிகைக் கடைகள், சுய வசதிக்கான பொருள்கள் விற்கும் கடைகள், கட்டிடங்களுக்கு உள்ளாக இயங்குகின்ற விவசாயிகளுக்கான சந்தைகள், மற்றும் முதன்மைப் பொருளாக உணவு மற்றும் மருந்துகளை விற்கும் கடைகளில் அதிகபட்சம் 50 சதவீதம் வாடிக்கையாளர்கள் மட்டுமே கொண்டபடி கட்டுப்படுத்துதல் , மற்றும் பிற சில்லறை விற்பனை  கடைகளில்  25 சதவீதம் வாடிக்கையாளர்கள் மட்டுமே வரும் வகையில் கட்டுப்படுத்துதல் . இத்துடன் கூடவே, பிற பொது சுகாதாரம் மற்றும் பணியிட பாதுகாப்பு நடவடிக்கைகளும் கூடள் பின்பற்றப்படுதல் வேண்டும்;
- தனிநபர் பராமரிப்பு சேவைகள் மூடப்படவேண்டும்;
- கட்டிடங்களுக்கு உட்புறமாகவோ மற்றும் திறந்தவெளியிலோ உணவு பரிமாறுதல் மற்றும் உண்ணுதலை தடை செய்தல். உணவகங்கள், பார்கள் மற்றும் பிற உணவு அல்லது பான நிறுவனங்களில் இருந்து  உணவு/பானங்களை எடுத்துச் சென்றுவிடுதல்,  வாகனத்தில் அமர்ந்தபடி வாங்கிச்செல்லுதல் மற்றும் அவரவர் இடங்களுக்கு கொண்டு சேர்த்தல் மூலம் மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படும்;
- கட்டிடங்களுக்கு உட்புறமாகவோ மற்றும் திறந்தவெளியிலோ விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உடற்பயிற்சிக்கான (எ.கா., ஜிம்கள்) வசதிகளில், நன்கு வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளுடன் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தல்;
- பகல் நேர முகாம் மூடப்பட வேண்டும்; மற்றும்,

- திருமணங்கள், இறுதிச் சடங்குகள் மற்றும் மத சேவைகள், சம்பிரதாயங்கள் அல்லது விழாக்களில் ஒரு அறைக்குள் அதன் கொள்திறனில் 15 சதவிகிதம் பேர் மட்டுமே இருத்தல், மற்றும் திறந்த வெளியில் இரண்டு மீட்டர் உடல் தூரத்தை பராமரிக்கக்கூடிய அளவிலான தனிநபர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல். கட்டிடங்களுக்கு உள்ளாக வரவேற்பு வைபவங்கள் போன்ற இந்த சேவைகளுடன் தொடர்புடைய சமூகக் கூட்டங்கள் இதில் இல்லை, அவை கட்டிடங்களுக்கு உள்ளாக அனுமதிக்கப்படுவதில்லை மற்றும் திறந்த வெளியில் ஐந்து பேர்கள் மட்டுமே இருக்கலாம்.

முதன்மை மருத்துவ சுகாதார அதிகாரியின் ஆலோசனையின் பேரில், குடியிருப்பாளர்கள் உணவு, மருந்து, மருத்துவகம் செல்வதற்கான முன் சந்திப்புக்கள், பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சமூக உறுப்பினர்களுக்கு ஆதரவளித்தல் அல்லது தங்கள் வீட்டு உறுப்பினர்களுடன் வெளியில் சென்று உடற்பயிற்சி செய்வது போன்ற தேவைகளுக்காக வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டிய பயணங்களை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அனைத்து தொழில் நிறுவனங்களிலும் உள்ள முதலாளிகள், தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தபடியே வேலை செய்வதை அனுமதிக்க, அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

**நகர நிர்வாகத்தின் சேவைகள் மற்றும் கட்டிடங்கள்**

***நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள்***

நகர் மன்றம் மற்றும் பெருநிறுவன கட்டிடங்கள் முன் பதிவின் பேரிலான சேவைகளுக்கு மட்டுமே திறந்திருக்கும். போகிறபோக்கில் வருவது அனுமதிக்கப்படுவதில்லை. முன்பதிந்த சந்திப்புக்கான ஏற்பாடு செய்துகொள்ள, வருகை தரவும்: www.brampton.ca/skiptheline.

***நகரின் பொழுது போக்கு மையங்கள்***

அடுத்த அறிவிப்பு வரும் வரை, ப்ராம்ப்டன் நகரின் அனைத்து பொழுதுபோக்கு மையங்களும் பொதுமக்கள் வராமலிருக்கும் வகையில் மூடப்படும் மற்றும் உள்ளரங்க நிகழ்ச்சிகள் யாவும் இடைநிறுத்தம் செய்யப்படும்.

***மெய்நிகர் நிகழ்வுகள்***

மெய்நிகர் உடற்பொருத்தம்

பயிற்றுவிப்பாளரால் வழிநடத்தப்படுகின்ற 30 நிமிட மெய்நிகர் உடற்பொருத்த வகுப்புகள் இலவசம்; இந்த நேரலை உடற்பயிற்சிகளில் பங்கேற்க குடியிருப்புவாசிகள் அழைக்கப்படுகின்றனர்.

55+ பட்டறைகள்

55 வயதுக்கு மேற்பட்ட ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் தங்கள் வீட்டில் இருக்கும் வசதிப்படி, இலவச மெய்நிகர் பட்டறைகளுக்கு பதிவு செய்துகொள்ளலாம். சமூகத்தினருடன் பழகவும் மற்றும் புதிய நட்பை உருவாக்குவதற்கும் ஆன்லைனில் பாதுகாப்பான மற்றும் கட்டமைக்கப்பட்ட சூழலில் இணைவதற்கும் பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

அனைவரையும் உள்ளடக்கிய மெய்நிகர் செயல்பாடுகள் மற்றும் பட்டறைகள்

குறைபாடுகள் மற்றும் விதிவிலக்கான தன்மைகள் கொண்ட பங்கேற்பாளர்களும்கூட, ஏதேனும் சில நடவடிக்கைகளில் சேரவும், புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்ளவும், சகாக்களுடன் நீடித்த நட்பை உருவாக்கவும் இந்தத் தொடர் நிகழ்ச்சியானது, ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

பதிவு செய்துகொள்வது எப்படி என்பது உள்பட, மெய்நிகர் நிகழ்ச்சிகள் தொடர்பான மேலும் தகவல்களை இங்கு காணலாம்: www.brampton.ca/recreation.

*ரெக் அட் ஹோம் (Rec At Home)*

சுயமாக கற்றுக்கொள்வதற்கான, வழிகாட்டுதலின் பேரிலான, ஆன்லைன் கலைகள் மற்றும் கைவினை பயிற்சிகளை, 24/7 என்னும் வகையில் அணுகலாம் ! காகிதங்களாலான இதயம் மற்றும் பல உருவவடிவங்களை எவ்வாறு உருவாக்குவது, உங்கள் கையெழுத்து திறன்களுக்கு மெருகூட்டும் வகையில் பயிற்சி செய்வது, மற்றும் பலவற்றை அறியவும். ப்ராம்ப்ட்டன் ரிக்ரியேஷன் மூலம் செய்யப்பட்ட பல்வேறு வகையான ரெக் அட் ஹோம் செயல்பாடுகளுக்கு, இங்கு அணுகவும்.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நூலகமானது சிங்க்வாகவ்ஸி, ஃபோர் கார்னர்ஸ் மற்றும் ஸ்பிரிங்டேல் ஆகிய கிளைகளில் மட்டுமே வரையறுக்கப்பட்ட சேவைகளை வழங்குகிறது. சிரில் கிளார்க், கோர் மெடோஸ், மவுண்ட் ப்ளெசண்ட் வில்லேஜ், சவுத் ஃப்ளெட்சர்ஸ் மற்றும் சவுத்வெஸ்ட் ஆகிய கிளை நூலகங்களில் போகிற போக்கில் புத்தகங்கள் எடுத்துக்கொள்ளும் வசதி கிடைக்கிறது. தற்போதைய செயல்பாட்டு நேரம், பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் புத்தகங்களை வைப்பது/எடுப்பது எப்படி என்பதை அறிய இங்கே க்ளிக் செய்க . தற்போது, நூலக கிளை சேவைகளில் புத்தகங்கள் எடுத்தல்/வைத்தல், பரிவர்த்தனை நோக்கங்களுக்காக நூலக கணினிகளை ஒரு நாளைக்கு அதிகபட்சம் ஒரு மணிநேரம் வரை பயன்படுத்துதல், மற்றும் வரையறுக்கப்பட்ட அச்சிடுதல், மற்றும் புகைப்பட நகல் சேவைகள் ஆகியவை மட்டுமே கிடைக்கும். நூலகத்தினுள் அமர்ந்து படிக்க இடம் கிடைக்காது மற்றும் தனி நபர் சாதனங்களை கொண்டு வந்து வேலை செய்ய அல்லது படிக்க, அல்லது பயன்படுத்த இந்த சமயத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. அனைத்து கிளைகளிலும் 24 மணி நேரமும் வெளிப்புறமாக வைக்கப்பட்ட, புத்தகத்தை இட்டுச்செல்லும் பெட்டிகள் மூலம், ஊழியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'கிராப் அண்ட் கோ' பைகளை உபயோகித்து நூலகப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களை பாதுகாப்பாகவும் எளிதாகவும்

கொண்டு சென்று திருப்பித்தரும் முறையைக் கண்டறியவும். அடுத்த அறிவிப்பு வரும் வரை அதிகப்படியான அபராதம் வசூலிக்கப்படாது.

**லின்குகள்**

இவை பற்றி அறிந்துகொள்ளவும்:

- ப்ராம்ப்ட்டன் நகர கோவிட் -19 நிகழ்ச்சி திட்டமிடுதல் மற்றும் சேவை பற்றிய புது செய்திகள் (City of Brampton COVID-19 programming and service updates)
- ப்ராம்ப்ட்டன் நகரில் – எது திறந்திருக்கும் , எது மூடப்பட்டிருக்கும் (City of Brampton – what's open, what's closed)
- கோவிட் – 19 அறிகுறிகள் (COVID-19 symptoms)
- கோவிட் – 19 தடுப்பூசி (COVID-19 vaccine)
- ப்ராம்ப்ட்டன் நகரில் மருத்துவ சோதனை செய்து கொள்ளுதல் (Testing in Brampton)
- தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வது எப்படி (How to self-isolate)
- கோவிட்- 19 தொற்று பரவல் சமயத்தில் வியாபார இடங்கள் மற்றும் பணியிடங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் (Keeping businesses and workplaces safe during COVID-19)
- பீல் பகுதியில் கோவிட் – 19 நோயாளிகள் (Cases of COVID-19 in Peel)

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca